கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் போல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சத்துணவுப் பணியாளர்களுக்கு வேறு அலுவல்கள் கொடுக்கிறார்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பது பற்றியது எனவே இதற்குத் தனிக் கேள்வி போடவும். திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்னுடைய தொகுதியிலிருந்து கடிதம் வந்து இருக்கிறது. இந்த மாதிரி பி.டி.ஓ.-க்கள் எல்லாம் அதிகமாகத் தொந்தரவு செய்கிறார்கள் ஆகவே உரிய நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குத் தகவல் கொடுத்து இப்படிப்பட்ட பணியாளர்கள் இவ்விதமான தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படக்கூடாது என்று அறிவுறுத்த முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு எந்த இடத்தில் இப்படி நடைபெற்றது, எந்த அரசு அதிகாரி இப்படிச் செய்தார் என்று குறிப்பிட்டு என்னிடத்தில் புகாராகக் கொடுத்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் சத்துணவுக் கூடத்திற்கு எந்த ஆண்டில் இருந்து எந்தெந்த விகிதத்தின் கீழ் காய்கறிகள் கொடுக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, பணியாளர்கள் பற்றியது. எனவே இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 490—திரு. பி. வி. இராஜேந்திரன், திரு. ஆர் சிங்காரம், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 7]

490—

சத்துணவு வழங்கும் செலவுக்கு கூடுதல் மானியம்

* 5360— திரு. பி. வி. இராஜேந்திரன் :

திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டத்தில் தற்போது ஒரு மாணவருக்கு வழங்கப்படும் அரிசி 100 கிராம், பருப்பு 15 கிராம், எண்ணெய் 1 கிராம் மற்றும் விறகு, காய்கறி, மளிகை சாமான் வாங்க செலவு 0.13 காசாகவும் இருப்பதால், இன்றைய விலைவாசி உயர்வையும் பொருளாதார நிலையையும் கருத்திற்கொண்டு அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் காய்கறி, விறகு, மளிகை சாமான் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் 0.13 காசு அளவு உயர்த்தப்படும் கருத்துரு எதுவும் அரசிடம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின் ஒரு அம்சத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே வழங்கப்பட்ட 3 கிராம் என்ற அளவைக் கடந்த கால ஆட்சியிலே ஒரு கிராம் என்ற அளவுக்குக் குறைத்திருக்கிறார்கள். மீண்டும் அதை 3 கிராம் ஆக்குவேன் என்று இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். அதைப்பற்றிய அவர்களுடைய பதில் என்ன என்பதை உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 491, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

Action on the complant sent Regarding adulteration in the Automatic Milk Vending Booth

*206 Thiru M. Sundaradoss

Will the Hon. the Minister for Adi-Dravidar Welfare be please to state

Whether the Commissioner of Milk at Madhavaram in Madras has recieived complaints from the Advocates about adulteration of milk supplied through the automatic milk vending booth of Chitrakulam during August 1991 and the action taken there of

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புகார் கடிதத்தின்பேரில் திடீர் சோதனை செய்யப்பட்ட போது இந்நிலையத்தின் பாலின் அளவு குறைத்து வழங்கப் பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக நிலைய சலுகைதாரருக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. நிலையத்தில் வழங்கப்பட்ட பாலைப் பரிசோதித்துப் பார்த்ததில் பாலின் தரம் திருப்திகரமாக இருந்தது

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவை தலைவர்அவர்களே, தானியங்கி என்கிற அந்த ஆட்டோமெட்டிக் மெஷின் இயங்காமல் அந்த பாலை வெளியே வைத்துஅந்த நபர் அளவு வைத் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அது உண்மையா? ஆமெனில் அந்த ஆட்டோமெட்டிக் மெஷினை ரிப்பேர் செய்து பழையமாதிரி பால் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அடிக்கடி பார்வையிடுகிறபோது இது போன்ற தவறுகள் இருக்கின்றே ஆட்டோமெட்டிக் வென்டில் மெஷின்ஸ் பெறுத்தவரையில் உடனடியாக ரிப்பேர் செய்து தர பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவை தலைவர்: வினா எண். 492 திரு.ச புரட்சிமணி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்

492—தொழுதூரில் கால்நடை மருத்துவமனை

*5640—திரு.ச. புரட்சிமணி

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மங்களூர் தொகுதி தொழுதூரில் ஒரு கால் நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?